பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 10 (23 3 68) சனி ★ வெளியூர்: பங்குனி 11 (24–3—68) ஞாயிறு [இதழ்: 235

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத குடும்பம். சுகாதாரச் செழிப்பும் பெற்றுச் சுகமாக வாழவும், அனைவரும் உணவு, உடை, உறையுள் வசதிகள் பெறவும், குடும்பத்துக்கு ஓர், இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.

இருக்கும் வசதியைக்கொண்டே விளைச்சலைப் பெருக்கும் திட்டம்

நீர்ப்பாசன மேம்பாட்டுக்கு அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள்

சட்டமன்றத்தில் அமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, மார்ச் 23—

"1968–69-ஆம் ஆண்டில் பாசனத்திற்கெனச் செலவிடக் கருதியுள்ள மொத்த மானியத் தொகை ரூ. 15,84,27,100 ஆகும்.

"பாசனத்தைப் பெருக்குவதற்கும் இப்போதுள்ள பாசன வசதிகளை மேம்படுத்தவும் இயன்ற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுப் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"நமது மாநிலத்தில் நீரும் நிலமும் குறைந்த பரப்பளவிலேயே கிட்டியுள்ளன. இந்த உண்மையைக் கருத்திற்கொண்டு, மிகு பயன்தரும் குறுகிய காலப் பயிர் வகைகளைப் பயிரிடும் நிலப் பரப்பளவைப் பெருக்கியும், அதனை அடுத்து இரண்டாம் போகப் பயிரை விளைவிப்பதிலும் நாம் முன்னேறிச் செல்ல வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இதற்கு நாம் நிலத்திற்கடியிலுள்ள நீர் வளத்தை நாட வேண்டியுள்ளது.

"இந்த அரசு உணவு உற்பத்தியைப் பெருக்க எடுத்துள்ள முக்கியமான நடவடிக்கைகளில் காவிரி கழிமுகப் பகுதியில் இரு போகப் பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவைக் கூட்டிப் புதிய பயிர் முறையைச் செயலுக்குக் கொண்டுவந்தது தலையாயதாகும்.

"வைகைக் கால்வாய்களை ரூ. 395 இலட்ச செலவில் புதுப்பிக்கும் வேலைத் திட்டம் ஒன்றுக்கு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளோம்.

"சிறு பாசனத் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் 1967, டிசம்பர் இறுதிவரை ரூ. 223.10 இலட்சம் செலவிட்டிருக்கிறோம். இதன் மூலமாக, 12,714 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதியளிக்கப்பட்டுள்ளது. 30,349 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதி செய்யப்பட்டுள்ளது. நீர்ப் பிடியிலிருந்து 595 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

"தகுதி பெற்ற பொறியாளர்கள் பலர் வேலையின்றி மலிந்து மிகுந்த இன்றைய நிலையில், பலருக்குப் பணி உயர்வுபெற இயலாமல் தேக்க நிலை ஏற்பட்டுள்ள நிலையிலும் இதுபற்றி அரசு மறுஆய்வு செய்து ஓய்வு வயது வரம்பினை 55-ஆக மீண்டும் ஆணையிட ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. விரைவில் இது குறித்து அரசு முடிவு செய்யும்.

"மேம்பாடு அடைந்த உழவு முறைகளைப் பின்பற்றும்படியும், பாசன நீர் வசதியை நல்ல வழிகளில் கையாளும்படியும் நாம் பெரிதும் வலியுறுத்த வேண்டும். அதிக அளவிற்கு விளைச்சலைப் பெருக்க மிகச் சிறந்த சிக்கன முறைகளில் நீரைப் பயன்படுத்துவது குறித்து உழவர் பெருமக்களுக்கு வேளாண்மைத் துறையினரும் பரிவுரை வழங்கி வருகின்றனர்."

பொதுப் பணித் துறையமைச்சர் திரு மு கருணாநிதி அவர்கள், இன்று சட்டமன்றத்தில் மானியக் கோரிக்கையை முன்வைத்து ஆற்றிய உரையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மேலவைத் தேர்தல்

மார்ச் 28-ல் வாக்குப் பதிவு

நாடாளுமன்ற மேலவைக்குத் தமிழகத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களுக்கான தேர்தல் வாக்குப் பதிவு மார்ச் 28-ஆம் நாள் காலை 10-மணி முதல் பிற்பகல் 3-மணிவரை நடைபெறும்.

ஆறு இடங்களுக்கு ஏழு பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்திருப்பதால் வாக்குப் பதிவு நடைபெற வேண்டியுள்ளது.

போட்டியிடுவோர்:—

ஜி ஏ. அப்பன் (தி.மு.க.)
தில்லைவில்லாளன் (தி.மு.க.)
எம். இரத்தினசாமி (சுத)
எம். ஆர். வெங்கட்ராமன் (இடது கம்யூ)
காஜா மொய்தீன் (லீக்)
கே. எஸ். இராமசாமி (காங்)
ஜே. சிவசண்முகம்பிள்ளை (சுயே)

புதுவை கழகத் தோழர் கை துண்டிப்பு

காங்கிரசுக் குண்டர்களின் மிருகச் செயல்— காவல் துறையினரும் உடந்தை

வட்டச் செயலாளர் தரும் பயங்கரத் தகவல்

புதுவை, மார்ச் 23—

"புதுவையில் காங்கிரசுக் குண்டர்களால் கழகத் தோழர்கள் தாக்கப்படுகின்றனர்; காங்கிரசாருக்குப் போலீசாரும் உடந்தையாக இருந்துவருகின்றனர். இதனால், 'எந்த நேரத்தில் என்ன நேருமோ' எனக் கழகத் தோழர்களும், பொதுமக்களும் பீதியும் பரபரப்பு மடைந்துள்ளனர்"

என்று புதுவை வட்ட தி. மு. க. செயலாளர் எம். ஏ. சண்முகம் இன்று தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

"நேற்றைக்கு முன்னாள் புதுவை வட்டத்தைச் சேர்ந்த சோளியங்குப்பம் தி. மு. க. கிளையின் செயலாளர் டி. பார்த்தசாரதி என்பவரை, காங்கிரசுச்காரர்கள், வலது கையில் வெட்டிப் படுகாயப்படுத்தியிருக்கின்றனர்!

"நேற்று அதே ஊரைச் சேர்ந்த தி. மு. க. வட்டப் பிரதிநிதியான வி. கிருஷ்ணன் என்பவரை வெட்டி அவரது இடது கையைத் துண்டித்துவிட்டனர்" என்று இன்று தகவல் கிடைத்திறது.

"கை துண்டிக்கப்பட்ட நிலையில் தோழர் கிருஷ்ணன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்; அங்கும் உடனடியாக உரிய சிகிச்சை செய்யப்படாததால், அந்தத் தோழரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது —உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது"

என்று இன்று, தோழர் எம். ஏ சண்முகம் தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

தோழர் கிருஷ்ணனை, காங்கிரசுக்காரர்கள் ஆறு பேர் சூழ்ந்துகொண்டு அரிவா...

அவர்கள்மீது போலீசில் புகார் செய்யப்பட்டும், போலீசார் உரிய நடவடிக்கை எடுக்காமல் காலங்கடத்தி வருகின்றனராம்.

அகவிலைப் படி உயர்வு மூலம்

ரூ.7-கோடி அதிகச்செலவு

சென்னை, மார்ச் 22—

"மாநில அரசு ஊழியர்களுக்கும் உள்ளாட்சிமன்ற ஊழியர்களுக்கும் 1967 அக்டோபர் திங்களில் அகவிலைப் படி உயர்த்தப்பட்டது; ரூ. 500 அதிகப்படாமல் ஊதியம் பெறுவோருக்கு நகர ஈட்டுப் படி வழங்கப்பட்டது. அகவிலைப் படி உயர்வு மூலம் ரூ. 7 கோடியும், நகர ஈட்டுப் படியின் மூலம் ரூ. 65 இலட்சமும் ஆண்டொன்றுக்குக் கூடுதலாகச் செலவாகும்.

"அகவிலைப் படி உயர்வினால் பயனடைவோர் 4,18,800 பேர்; பயன் பெருதவர் 2,725 பேர்.

"நகர ஈட்டுப் படியால் பயனடைவோர் 45,500 பேர்; பயன் பெருதவர் 900 பேர்—எனத் தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது."

இத்தகவலை, முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றக் கேள்விநேரத்தில் தெரிவித்தார்.

தமிழக அமைச்சர்கள் மீது மத்திய போலீசு கண்காணிப்பு?

'சகித்'துக்கொள்வதாக அண்ணா அறிவிப்பு

சென்னை, மார்ச் 23—

இந்திய அரசின் புலனாய்வுப் பிரிவின் பணியாளர் தொகுதி இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டிருப்பது உண்மைதான் என்றும், அத்தொகுதியினரால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் நகல் எதுவும், தாம் அரசுப் பொறுப்பேற்றபின் இந்த அரசுக்கு அனுப்பப்படவில்லை என்றும், முன்பு அனுப்பப்பட்டதாகத் தாமும் கேள்விப்படுவதாகவும், ஆனால் இப்போது அப்படிப்பட்ட அறிக்கையைத் தாம் பார்க்கவில்லை என்றும், முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

பாலசுப்பிரமணியம் (ச. சோ.):— "மத்திய புலனாய்வுத் துறையினர் நமது மாநில அமைச்சர் ...

சொல்லப்படுவது உண்மையா? அப்படிக் கண்காணிப்புச் செய்யலாமா?"

... பொறுப்பில் இருக்கும் வரையில் எங்கள் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதைப் பெருமையாகவே கொள்ளுகிறோம்; ஏனெனில், மறைமுகமாக நாங்கள் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை."

குமாரசாமி (பி.சோ.):— "இந்த மாநில அமைச்சர்கள்மீது மத்திய அரசு கண்காணிப்புச் செய்வதை ஏற்றுக்கொள்ளுவதாக முதலமைச்சர் சொன்னார்; அப்படியானால், அது, 'சனநாயகம்' என்று இந்த அரசு ஏற்றுக்கொள்கிறதா?"

அண்ணா:—"எங்கள்மீது கண்காணிப்புச் செய்வதை ஏற்றுக்கொண்டதாகப் பொருளில்லை; சகித்துக்கொள்வதாகத்தான் பொருள்கொள்ள வேண்டும்."

அமெரிக்க அழைப்புப்பற்றி அறிஞர் அண்ணா

அன்று தமிழகம் அனுப்பிய அன்புக் காணிக்கை என்னை அழைக்கிறது!

சென்னை, மார்ச் 23 –

"அமெரிக்க அரசு என்னை அழைத்தாலும்—'யேல்' பல்கலைக் கழகம் என்னை அழைத்தாலும்—உள்ளபடியே, அன்றொரு நாள் தமிழகத்திலிருந்து சென்ற பரிசுப் பொருட்கள்தாம் என்னை அங்கு அழைப்பதாகக் கருதுகிறேன்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், பச்சையப்பன் அறநிலைய 120-வது ஆண்டு விழாவில் உரையாற்றுகையில் உருக்கமாகக் குறிப்பிட்டார்; இத்தொடர்பில் மேலும் அவர் விளக்கியதாவது:—

"நான் அமெரிக்கா போவது பற்றி நண்பர்கள் குறிப்பிட்டார்கள்; அந்த நாடு 'செல்வம் கொழிக்கும் நாடு' என்றும் குறிப்பிட்டார்கள்! ஏழ்மை நாட்டிலிருந்து நான் போவதாலோ என்னவோ—அங்குகூட இப்போது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது; ஆயினும், அமெரிக்காவிலுள்ள 'யேல்' பல்கலைக் கழகத்தில் தங்கி மாணவர்களுடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்திருப்பது பற்றி அகமகிழ்கிறேன்!

'யேல்' பல்கலைக் கழகத்தைப் பற்றி நான் சில விவரங்களை அறிந்தபோது, என்னை அழைத்ததன் பொருளையும் பொருத்தத்தையும் அறிந்துகொண்டேன்.

அந்தப் பல்கலைக் கழகம், சாதாரண நிலையில் கல்லூரியாக இருந்து, நடத்தப்பட முடியாத நிலை ஏற்பட்டது; அப்போது அந்தக் கல்லூரிக்கு நன்கொடை வேண்டி உலகின் பிற பகுதிகளுக்கு அன்புக் கடிதங்கள் விடுத்தார்கள்; அப்போது சென்னை கவர்னராக 'யேல்' என்பவர் இருந்தார்; அவருக்கும் அக்கடிதம் கிடைத்தது; உடனடியாகப் பணம் அனுப்ப முடியாமல்—மூன்று பொதி பருத்தியையும், படங்களையும், புத்தகங்களையும் அனுப்பி, 'இவற்றை ஏலத்திற்கு விட்டுப் பொருளை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று எழுதியிருந்தார்; அந்தப் பொருட்களை கல்லூரி நிர்வாகத்தினர் ஏலத்திற்கு விட்டதன் மூலம் பெரும் பணம் கிடைத்தது; அதை வைத்துக் கல்லூரி துவக்கப்பட்டு—அது விரிவடைந்து—பல்கலைக் கழகமாக மாறியது!

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 பங்குனி 10 (23—3—68) சனி

வாக்குறுதி காற்றுடியாவதா?

ஆட்சி மொழியாக இந்தி திணிக்கப்பட்டிருப்பதை, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாநிலங்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், முழுமூச்சாக எதிர்த்தும் வருகின்றன. இவ்வெதிர்ப்பின் ஆணிவேராகவும் முன்னோடியாகவும் மாணவர்கள் உள்ளனர்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆட்சிமொழித் திருத்தச் சட்டமும், அத்துடன் இணைந்த தீர்மானமும், நீறுபூத்த நெருப்பாக இருந்துவந்த இந்தி எதிர்ப்பை மீண்டும் கொழுந்துவிட்டு எரியச் செய்துவிட்டது. ஆந்திரத்திலும், மைசூர் மாநிலத்திலும், இவ்வெதிர்ப்பில் மாணவர்களே தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். தமிழகத்திலும் இவ்வெதிர்ப்பு தலைதூக்கி நின்றது.

'இந்தியுடன் ஆங்கிலமும் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருந்துவரும்' என, இரண்டு தலைமை அமைச்சர்களும் தந்திருந்த வாக்குறுதிக்குச் சட்ட உருவம் தர முயற்சி செய்யப்படுவதாகக் கூறிகொண்டு, அவ்வாக்குறுதியின் உட்பொருளைச் சிதைத்துவிடக் கூடிய திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவை முதற்கண் உருவாக்கி வெளியிட்டபொழுது, 'இந்தி பேசாத மாநிலங்களுக்கு இந்திய அரசால் எழுதப்படுகின்ற கடிதங்கள் -- அனுப்பப்படுகின்ற சுற்றறிக்கைகள் ஆகிய அனைத்தும், ஆங்கிலம் -- இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் இருந்திட வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது; அதாவது, இந்தி பேசாத மாநிலங்களுக்கு இந்திய அரசினால் அனுப்பப்படக்கூடிய கடிதங்கள் -- அறிக்கைகள், இந்தி மொழியில் இருந்திட்டாலும் அத்துடன் அக்கடிதங்களுக்குச் சரியான ஆங்கில மொழிபெயர்ப்பும் அனுப்பப்படும் என வலியுறுத்தப்பட்டிருந்தது, இதுபோன்றே, 'இந்தி பேசாத மாநிலங்களுக்கு இந்தி வழங்கும் மாநிலங்கள் எழுதக்கூடிய கடிதங்களும் ஆங்கில மொழியிலும் இருந்திட வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் இந்த ஏற்பாட்டை, நாடாளுமன்றத்திலுள்ள காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த இந்தி மொழியினர் முழுமூச்சாக எதிர்க்கலாயினர்; 'இந்தியில் எழுதப்படும் கடிதங்களை, அக்கடிதங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இந்தி பேசாத மாநிலங்கள்தான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக்கொள்ள வேண்டும்' என்றும் அவர்கள் பிடிவாதமாகக் கோரலாயினர்.

இந்தி மொழியினரின் இக்கோரிக்கையை அலட்சியப்படுத்தத் துணிவில்லாத இந்திய அரசு, இந்தி பேசாத மாநிலங்களுக்கு இந்தியில் எழுதப்படுகின்ற கடிதங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்புவதற்கெனத் தனியாக அரசாங்க மொழித்துறை ஒன்றை உருவாக்கி, அப்பொறுப்பை அத்துறையிடம் ஒப்படைக்கப்போவதாக உள்துறை அமைச்சு மூலம் விளக்கமளித்தது; நாடாளுமன்றத்தில் அறிவித்திருப்பதேபோல், உள்துறை அமைச்சு இன்று செயல்பட்டுவருகிறதா என்பதுதான் கேள்வி.

இந்திய அரசைச் சார்ந்த பற்பல அரசாங்கத் துறைகளும், இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு அரசாங்கத் துறைகளுக்கு எழுதக்கூடிய இந்திக் கடிதங்களுடன் அதற்குரிய ஆங்கில மொழிபெயர்ப்பையும் அனுப்பிவைக்க—உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளபடி—கடமைப்பட்டுள்ளன. இக்கடமையை அந்த அரசாங்கத் துறைகள் சரிவர நிறைவேற்றி வைத்தால்தான், உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் அன்று அறிவித்துள்ளதற்கு மதிப்பிருக்க முடியும்; இல்லையானால், 'அப்பொழுது இந்தி எதிர்ப்பாளர்களிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பு உணர்ச்சியைத் தணிய வைப்பதற்காக உள்துறை அமைச்சர் ஏதோ கூறினர்; அது அன்றுடன் முற்றுப்பெற்றுவிட்டது' என்றுதான் எவரும் கொள்ளுவர். தனி நபர்கள் இப்படி செயல்படுவதே விரும்பத்தகாதது என்றால், ஒரு பேரரசின் உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் கொடுத்த வாக்குறுதி செயலுருவம் பெறுமல் அலட்சியப்படுத்தப்படுவதை எவர்தான் விரும்புவர்? 'முறையானது' என எவர்தான் ஒப்புக்கொள்ளுவர்?

'இந்தியில் அனுப்பப்படும் கடிதங்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பும் அனுப்பப்படும்' என, அன்று உள்துறை அமைச்சர் கூறியது எந்த முறையில் செயலாற்றப்பட்டு வருகிறது என்ற உண்மையை, கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு அவர்கள் அங்குள்ள சட்டப் பேரவையில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்; அதை அப்படியே இதன்கீழ் வெளியிடுகின்றோம்:—

"எனக்கு இந்தி தெரியும் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால், இந்தியில் வரும் கடிதங்களை வைத்துக்கொண்டு நான் எதவும் செய்ய முடியாது.

"இந்தியில் மட்டும் வரும் மத்திய அரசின் கடிதங்கள் அவர்களுக்கே திருப்பி அனுப்பப்படும்; ஆங்கிலம் அல்லது மலையாள மொழிபெயர்ப்புடன் இணைத்து வந்தால்தான் அக்கடிதங்களைக் கேரள அரசு ஏற்றுக்கோள்ளும்.

"சில காலத்துக்குமுன் மத்திய அரசு, இந்தியில் மட்டும் எழுதப்பட்ட ஒரு கடிதத்தைக் கேரள அரசுக்கு அனுப்பியிருந்தது; ஆங்கில மொழிபெயர்ப்பு கேட்டு அக்கடிதம் கேரள அரசினால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது; ஆனால் மத்திய அரசோ, அதற்குப் பதிலாக, 'கேரளப் பல்கலைக்கழகத்தில் உள்ள இந்திப் பிரிவிலிருந்து அதற்கான மொழிபெயர்ப்பினைப் பெற்றுக் கோள்ளலாமே' என யோசனை கூறி அதே கடிதத்தைத் திரும்பவும் அனுப்பிவைத்தது. மத்திய உள்துறையமைச்சர் வரையில் இந்தப் பிரச்சினை கேரள அரசினரால் கோண்டு செல்லப்பட்டபோது, 'இதுபோன்ற தவறுகள் இனி நடக்காமல் பார்த்துக் கோள்கிறேன்' என அவர் உறுதிமொழி தந்தார்."

தாம் கொடுத்த உறுதிமொழியை உள்துறை அமைச்சரே மதித்துச் செயல்படாமலிருக்கின்றார் என்பது வியப்புடன் கூடிய வேதனையாகும். 'வாக்குறுதிப்படிச் செயல்படக்கூடாது' என முடிவு கட்டிக்கொண்டு உள்துறை அமைச்சர் அன்று வாக்குறுதி கொடுத்திருந்தால் அல்லாது, இன்று அவர் அவ்வாக்குறுதிக்கு முரணாகச் செயல்பட அதே உள்துறை அமைச்சர் துணியமாட்டார் அல்லவா? தாம் கொடுத்த வாக்குறுதியைத் தாமே காற்றில் பறக்க விடுவது, கொள்ளததக்கதுமல்ல—நியாயமானதுமல்ல என்பதுடன், இந்திய அரசாங்கத்தின் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கதுமாகும்.

—கா. க.

தகுதி இதழ் தேவை இல்லை!

"இந்தியாவில் நடைபெறும் திருமணங்களுக்கு, உடல் நிலைத் தகுதி பற்றிய மருத்துவர் தகுதிப் பத்திரம் தேவையில்லை" என்று மக்களவையில், சட்டத்துறை துணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"திருமணமாக இருக்கும் ஆணோ அல்லது பெண்ணோ, தாங்களேதான், தங்களுக்குத் துணையாக வரவிருக்கும் மற்றவரது உடல்நலத் தகுதி பற்றி முடிவு செய்துகொள்ள வேண்டுமேயல்லாது, ஒரு சில நாடுகளில் உள்ளதுபோல் இந்தியாவில் மருத்துவரின் நற்சான்றிதழ் பற்றி வற்புறுத்துவதில்லை"

என அமைச்சர் மேலும் விளக்கியுள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில் உரத் தட்டுப்பாடில்லை

சென்னை, மார்ச் 21—

"தஞ்சை மாவட்டத்தில் இரசாயன உரம் கிடைப்பதில் தட்டுப்பாடு இல்லை; இந்த ஆண்டு கிடைத்ததைப் போலவே அடுத்த ஆண்டும் அமோக விளைச்சல் ஏற்படுத்துவதற்குத் தேவையான அளவு உர வகைகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன"

என்று, சட்டமன்றத்தில் புலவர் முருகையனின் கேள்விக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி பதிலளித்தார்.

தொழில் துறையில் தமிழகத்தின் சாதனை

இடர்ப்பாடுகள் பல இருந்தும் வளர்ச்சியின் வேகம் குறையவில்லை

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஆய்வுரை

சென்னை, மார்ச் 22—

"எந்த உற்பத்தித் துறைகளின் உற்பத்திப் பிரிவுகளில் ஒரு பகுதி நாட்டின் பாதுகாப்பினைக் கருதி கூட்டுறவுத் துறையிலோ, பொதுத் துறையிலோ இருந்தாகவேண்டியுள்ளதோ அந்த உற்பத்திப் பிரிவுகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலைவாசிகள்மீது உள்நாட்டில் ஓரளவிற்குக் கட்டுப்பாடு செய்யும் நோக்கத்துடன் அரசு அந்த உற்பத்திப் பிரிவுகளை மட்டும், தானே சொந்தமாக நிறுவ முன்வந்துள்ளது."

"தனிப்பட்ட தொழிலதிபர்கள் தொழில் தொடங்க முன்வராத அல்லது முன்வர இயலாத தொழில் துறைகளிலும் அரசாங்கம் அத்தொழில்களைத் தானே தொடங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

"இவ்வண்ணம், தமிழ்நாட்டில் தொழில் துறையில் தனிப்பட்டவர்களின் முயற்சிகளுக்குப் பெருமளவில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது; இதற்கு அரசாங்கம் வேண்டிய உதவி செய்து வருகிறது: இக்காரணத்தால், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி வேகம் பேணப்பட்டு வருவதுடன், அது பெருகவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

"தொழில் வளர்ச்சியின் சில முக்கியமான குறியீடுகளை கவனித்தோமானல், தொழில் துறையில், தமிழ்நாடு சாதித்துள்ள மாபெரும் முன்னேற்றம் தெளிவாக விளங்கும்"

என்று தொழிற்துறையமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

தொழிற்துறை மானியக் கோரிக்கையை அவைமுன் வைத்து அவர் அளித்த ஆய்வுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"உழவையே பெருந்தொழிலாகக் கொண்ட தமிழ்நாடு தொழில் துறையில் சிறிது முன்னேற்றமடைந்த ஒரு மாநிலமாக உரு மாறியிருப்பது, நாட்டின் விடுதலைக்குப் பிறகு இன்றைய வரலாற்றிலே குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாக உள்ளது.

சிறிய நிலப் பரப்பு—அடர்ந்த மக்கள் தொகை—நாளும் பல்கிவரும் மக்களின் பெருக்கம்—கனிவளம், எரிபொருள், காட்டு வளம், சில நேரங்களில் நீர் வளம் முதலிய குறைபாடுகள் இருந்தும்—இவற்றின் இடையே தமிழகத்தில் இப்பெரு மாற்றம் ஏற்பட்டுள்ளதை எண்ணிப் பார்த்தால் இதன் சிறப்பு மேலும் மிளிர்வதைக் காணலாம்.

ஆயினும், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கும், தொழில்துறையில் தொடர்ந்து முன்னேறுவதற்கும் ஏற்ற சில கூறுகள் உள்ளன.

புதிய தொழில்களைத் தொடங்கும் வண்ணம் நிலவுகின்ற இனிய பொருளாதாரச் சூழல்—செவ்விய நிர்வாக அமைப்பு—சிறந்த பொறியாளர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், தொழிலாளர்களும் திட்டமிட்ட அளவிற்குப் போதிய எண்ணிக்கையில் கிடைத்தல்—ஆகியவையே இந்தக் கூறுகளாகும்.

கடந்த ஆண்டில் இத்தகைய வாய்ப்பான நிலைமைகள் தொடர்ந்து நிலவியதோடு அவை வளரவும் வகை செய்யப்பட்டது. இவ்வாறு, இது வளர இம்மாநிலம் இத்துறையில் அடைந்த முன்னேற்றத்தைத் தொடர்ந்து பேணிவரத்தக்க நிலையில் இம்மாநிலம் உள்ளது.

கூட்டாட்சி முறையில் ஒரு பிரச்சினை:

மத்திய அரசுமீது மைசூர்-மாராட்டிர மாநிலங்கள் வழக்குத் தொடரும்?

ஆற்றுநீர்த் தகராறு நீதிமன்றம் போகும்

புதுடில்லியில் ஆச்சரியம் --- கலக்கம்!

கிருஷ்ண — கோதாவரி ஆற்று நீரைப் பங்கிடும் பேச்சுவார்த்தைகளில் சுமுகமான முடிவு ஏற்படவில்லை என்ற காரணத்தினல் கருநாடக அரசு, முழுப் பிரச்சினையையும், நீதி முறையில் வாதாடி நியாயத்தைப் பெறுவதற்காக, அட்வகேட்-ஜெனரலிடம் ஒப்படைத்திருக்கிறது.

மைசூர் சட்டமன்றத்தில் பலத்த கையொலிக்கிடையே பொதுப் பணித்துறை அமைச்சர் வீரேந்திர பட்டீல்,

"பேச்சுவார்த்தையோ, கடிதப் போக்குவரத்தோ மேற்கொண்டு நடத்துவதில் இனிப் பயனில்லை; பிரச்சினையை, அட்வகேட்--ஜெனரலிடம் ஒப்படைத்துவிட்டோம்"

என்ற அறிவிப்பினைத் தந்திருக்கிறார்.

ஏறக்குறைய இதே நேரத்தில் மாராட்டிரச் சட்டமன்றத்திலும் இப்பிரச்சினை கிளப்பப்பட்டிருக்கிறது.

இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் நீதி கோரி வாதாடப்போவதாக மாராட்டிர நீர்ப்பாசன அமைச்சர் சவாண் தெரிவித்திருக்கிறார்.

"மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் ஆந்திரத்துடன் சேர்ந்துகொண்டு நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் பாரபட்சம் காட்டுகிறார்"

என்றதோர் குற்றச்சாட்டினையும் மாராட்டிர சட்டமன்றத்தில் நீர்ப்பாசன அமைச்சர் சவாண் தெரிவித்துள்ளார்.

இதன்படி இரு மாநில அரசுகளும், நல்ல முடிவினை மத்திய அரசு ஏற்படுத்தித் தராவிட்டால், நீதிக்காகப் போராடி வழக்குத் தொடரும் எனத் தெரியவருகிறது!

'பேச்சுவார்த்தைகளுக்குக் காரணமாக இருந்தது' என்ற வகையில், இரு மாநில அரசுகளும் எடுத்துள்ள முடிவு மத்திய அரசுக்கு அதிர்ச்சியையும், கலக்கத்தையும் கொடுத்திருப்பதாகப் புதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

மாநில—மத்திய அரசுகளிடையே உள்ள உறவு முறை, இத்தகராறினல், 'நாட்டின் ஒற்றுமை உணர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும்' என்ற அடிப்படையில், கூடுமானவரையில் இந்தப் பிரச்சினை நீதிமன்றம் செல்லாத அளவுக்குப் புதுடில்லி, முயற்சிகள் மேற்கொள்ளுமெனத் தெரிகிறது!

சென்ற ஆண்டின் சிறந்த பத்திரிகையாளர்

இங்கிலாந்து ஆண்டுதோறும் வழங்கும் சிறந்த பத்திரிகையாளருக்கான பரிசு—1967-ம் ஆண்டுக்கு—ஆஸ்திரேலிய நாட்டில் பிறந்த செய்தியாளர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

"வியட்நாம் போர் நிலைமைகள் பற்றி அவர் இலண்டன் 'டெய்லி மிர்ரர்' பத்திரிகைக்கு அனுப்பிய செய்தித் தொகுப்புகள் சிறந்தவையாக இருந்தன" என நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

இந்தியாவில் இருப்பது பல பண்பாடுகளே !

காந்தியை மேற்கோள் காட்டி மத்திய அமைச்சர் விளக்கம்

"அனைத்திந்திய வானொலியில் பல்வேறு மொழிப் பகுதி மக்களின் பெயர்களை உச்சரிக்கும்போது சரிவரக் கவனம் காட்டப்படுவதில்லை" என்ற குற்றச்சாட்டு, மாநிலங்களவையில் 21-3-68 அன்று வந்தபோது, ஜனசங்க உறுப்பினர் டி. தெங்காடி என்பவர்,

"இந்தியாவில் 14 அல்லது 15 மொழிகள் இருந்தாலும் பண்பாடு ஒன்றே"

என்று கூறினார்.

அதற்கு மறுப்பு தெரிவித்து, செய்தி ஒலிபரப்புத் துறைத் துணை அமைச்சர் கே. கே. ஷா பேசுகையில்,

"இந்தியாவில் ஒரே பண்பாடு இருப்பதாகக் கூறுவது தவறு ; காந்தியடிகளே, இந்தியாவில் பல மொழிகள் இருப்பது போலயே பல பண்பாடுகளும் இருப்பதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்"

என்று விளக்கினார்.

காமராசர் சிலை-- ஒரு திருத்தம் !

"வேறு ஒரு கட்சியைச் சேர்ந்த மற்றொரு முதலமைச்சர் இந்த மாநிலத்தினை ஆளும்போது (மவுண்ரோடு அருகே உள்ள) காமராசர் சிலையின் கீழ், 'திரு. காமராஜ்—தமிழ்நாட்டு முதலமைச்சர்' என்ற சொற்கள் எழுதப்பட்டிருப்பது சரியாகத் தோன்றவில்லை; 'தமிழ்நாட்டு முதலமைச்சர்' என்ற சொற்களின்கீழ், காமராசர் எந்த ஆண்டுகளில் அப்பதவியில் இருந்தார் என்பதனைக் குறிப்பதற்கு, தொடர்புடையோர் இனியேனும் முயற்சிக்கவேண்டும்."

என்று சென்னையைச் சேர்ந்த கே. நரசிம்மன் என்பவர், 21-3-68 'மெயில்' இதழில்—ஆசிரியர் கடிதப் பகுதியில்—கருத்துத் தெரிவித்துள்ளார்.

கயத்தாற்றில் சீரணிப் பணி

கயத்தாற்று ஊராட்சி ஒன்றிய சீரணிப் படையினரால் வடக்கு இலந்தைக்குளம் ஊராட்சி மன்றத்தால் காசி கன்னியாகுமரி நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து செல்லும் இணைப்புச் சாலை செப்பனிடும் பணி 15-3-68 காலை 8-மணியளவில் துவங்கியது.

கோவில்பட்டி கோட்டாட்சித் தலைவர் திரு. பி. சென்னமன் பி.ஏ. மண்வெட்டியால் கூடையில் மண்ணை அள்ளி கொடுக்க—கயத்தாறு ஊராட்சி ஒன்றியத் தலைவர் எஸ். கோதண்டராமத் தேவர் அவர்கள் அதனை எடுத்துப் போட சீரமைப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டது.

கடம்பூர் திரு. சனார்த்தனம் உட்பட பல சீரணித் தொண்டர்கள் பங்குகொண்டு மிக்க ஆர்வத்துடன் சாலையை செப்பனிட்டார்கள். கோவில்பட்டி கோட்ட ஊராட்சி மன்ற அதிகாரி சிவதாணு எம்.ஏ.,பி.எல்., உதவிப் பொறியாளர் சங்கரன் பி இ. ஆகியோர் சீரணிப் படையினரால் செய்யப்படும் பணியை பார்வையிட்டு பணியைப் பாராட்டி ஊக்கமூட்டினார்கள்.

ஆணையாளர் ஜெயபாலன் பி.ஏ. ஊராட்சிமன்றத் தலைவர் முத்தையா தேவர் ஆகியோர் வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொடுத்ததுடன், பணி நடக்கும் காலத்தில் உடன் இருந்து உற்சாகமூட்டினர். ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் அனைவரும் பங்குகொண்டு சிறப்புப் பணியாற்றினர்.

பாலாற்று நீர் ஒப்பந்தம் மீறப்படவில்லை

மைசூர் அரசு மீது குற்றஞ்சாட்ட வேண்டாம்

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் மு. கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, மார்ச் 21—

"பாலாற்று நீர் குறித்து, தமிழக அரசும்—மைசூர் அரசும் 1892-ல் செய்துகொண்ட உடன்பாட்டை, மைசூர் அரசு இதுவரை மீறவில்லை. அப்படி மீறியதாகக் குற்றஞ்சாட்டும் வகையில் இந்த மன்றத்தில் கேள்விகளை எழுப்பவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்"

என்று, பொதுப்பணி அமைச்சர் திரு. கருணாநிதி, சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

பாலாற்று நீர் குறித்து திரு. கே. விநாயகம் கேட்ட மூலக் கேள்விக்கு அடுத்துக் கேட்கப்பட்ட துணைக் கேள்விகட்கும் அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

"தமிழகமும்—மைசூரும் 1892-ல் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படி ஊறு விளையக்கூடிய வகையில் எந்த அணையையும் மைசூரில் கட்டக்கூடாது.

"இந்த ஒப்பந்தத்தால் நமக்கு எந்தவிதப் பாதகமும் இல்லை. ஒப்பந்தம் மீறப்படாமலிருக்கிறதா என்பதைக் கண்காணிக்க கிருஷ்ணராசசாகரில் துணைப் பொறியர் ஒருவர் இருந்துவருகிறார்.

"பாலாற்றுப் படுகை விதிகளை மேற்கொண்டு தளர்த்துவதற்கில்லை. அடிநீர் வாய்ப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்று ஆராய்ந்து முடிந்த பின்தான் தளர்த்தலாம்."

அதிக மதிப்பெண் பெற்ற மாணவியர்களுக்குப் பரிசுகள் !

சேலம் சீரமைப்புக் குழு நடத்திய விழா

சேலம் நகரவை பாவடி மகளிர் உயர்நிலைப் பள்ளியில், 1967-68-ம் ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மதிப்பெண்கள் வாங்கிய மாணவிகளுக்குப் பரிசு வழங்கும் விழாவும்—சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் சீரமைப்புக் குழுத் தலைவர் திரு. பி. மாணிக்கம் வரவேற்றார்.

இவ்விழாவிற்கு சேலம் நகராட்சி ஆணையாளர் திரு. கே. சுப்பிரமணியம் பி.எஸ்சி. தலைமை வகித்து உரையாற்றினர்.

பள்ளித் தலைமை ஆசிரியர் திருமதி குர்சித்பேசம் பி.ஏ.எல்.டி. அறிக்கை வாசித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் கே. செயராமன் பி.ஏ., வெற்றி பெற்ற மாணவிகளான ஆர். கயற்கண்ணி (முதற் பரிசு), சி. இராஜேசுவரி (இரண்டாம் பரிசு), ஆர். எஸ். சாந்தா (மூன்றும் பரிசு) ஆகியோருக்குச் செப்புக் குடங்களைப் பரிசளித்தார்.

பின் அவர், சீரமைப்புக் குழுவினரையும் மாணவிகளையும் பாராட்டிப் பேசினர்.

அடுத்து, நகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி காமாட்சி அம்மையார் (தி.மு.க.) சிறப்பு மலரை வெளியிட்டு உரையாற்றினர்.

மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர் சி. பழனியப்பன் (தி.மு.க.) சீரமைப்புக் குழுவினர் இப்படி ஒரு விழாவை ஏற்படுத்தி மாணவிகளை உற்சாகப்படுத்துவதைப் பாராட்டிப் பேசினர்.

நகராட்சி மன்ற உறுப்பினர் பி. எஸ். மாணிக்கம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

விழாவிற்கு வருகைதந்த அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

டிவிஎஸ் டெலிவரி வான் பாடி

என்ணெய்ச் செலவும் டயர் தேய்மானமும் குறைவு. பல்லாண்டுகள் உழைக்கும். உறுதியானது.

பாடிகள் கட்டுவதில் சுமார் நாற்பது ஆண்டுகள் அனுபவமுள்ளது டிவிஎஸ். அவரவர் தேவைக்கேற்ப எந்தவிதமான சேஸிஸ் மீதும் லேசான, உழைப்பிற்கு உறுதியான பாடிகளைத் தயாரிக்கிறது டிவிஎஸ்.

TVS

டிவிஎஸ் — இந்தியாவிலேயே பாடிகள் கட்டுவதில் மிகப்பெரிய ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்—மதுரை (டிவிஎஸ் ஸ்தாபனம்)

SI/4253

புலவர் ஆபிதீன் குடும்ப நிதி

சென்ற 3-3-68-ல், காயிதே மில்லத் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புலவர் ஆபிதீன் அவர்களின் குடும்ப உதவி நிதி வசூலிப்பதென்றும், அதற்காக ஒரு நிதி வசூல் குழு அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. காஜா மொய்தீன் எம்.சி. அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு அமைக்கப்பட்டது; இதில் காயிதே மில்லத் அவர்களும் உறுப்பினராக உள்ளார்.

தமிழகத்திலும், கடல்கடந்த பர்மா — மலேசியா — இலங்கை ஆகிய நாடுகளிலும் ஆயிரக்கணக்கான இன்கவிகள் மூலம் இஸ்லாமிய சமுதாயத்தைத் தட்டியெழுப்பியவரும், முஸ்லிம் லீக்கின் ஒப்பற்ற ஊழியர்களில் ஒருவருமான புலவர் ஆபிதீன் அவர்களின் மறைவால் அவரது குடும்பம் வறுமைச் சூழலில் சிக்கி வாடி வதங்குகிறது; புலவரது குழந்தைகள் படிக்கவும், வளரவும் பணம் தேவைப்படுகிறது.

எனவே, புலவர் ஆபிதீன் குடும்பத்தின் வறுமையைப் போக்கக் கணிசமான தொகையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி உதவ வேண்டப்படுகிறது.

"அண்மையில் புலவர் ஆபிதீன் குடும்ப நிதிக்காக, சென்னையில் இசைமுரசு நாகூர் ஈ.எம். அனிபாவும், இசைமணி எம். எம். யூசுப்பும் சிறப்பு இசை நிகழ்ச்சி நடத்துவர்; அதற்கும் பேராதரவை எதிர்பார்க்கின்றோம்" என்று குழுச் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:—

எஸ் ஏ. காஜாமொய்தீன் எம்.சி.,
(தலைவர், புலவர் ஆபிதீன் குடும்ப உதவி நிதிக் குழு)
49, சேக் தாவூத் தெரு,
சென்னை-14.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

இராதாகிருட்டினன், அ. நா. அரங்கநாதன், செங்கம் பேரூராட்சித் தலைவர் து. கண்ணன், சி. இராமலிங்கம், சி. சின்னராசு, எஸ். நடராசன் ஆகியோர் பேசினர்.

சென்னை மணிவண்ணன் குழுவினரால், 'புயலுக்குப் பின்' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

அருப்புக்கோட்டையில் கால்நடை பற்றிய கருத்தரங்கு

23/3/68

அமைச்சர்கள் ஏ. கோவிந்தசாமி-- செ. மாதவன் பங்கேற்பு

இராமனதபுரம் மாவட்ட கால்நடைக் கருத்தரங்கு 10-3-68 அன்று அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு முன்னிலையில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சாத்தூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். இராமசாமி (நாயுடு) தலைமைவகித்தார்; திரு. செயராம் (ரெட்டியார்) எம்.எல்.சி. வரவேற்புரை நிகழ்த்தினர்; அருப்புக்கோட்டைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் சௌடி எஸ். சுந்தரபாரதி துவக்க உரை ஆற்றினர்.

பின்பு, வந்திருந்த பிரதிநிதிகள் மூன்று குழுக்களாகச் செயல்பட்டு கருத்தரங்கு நடத்தி, தீர்மானங்களுக்கு உருவம் தந்தனர்; தீட்டப்பட்ட தீர்மானங்கள், அனைவராலும் வரவேற்கப்பட்டன.

இரண்டாம் நாள் கருத்தரங்கு 11-3-68 காலை தொடங்கி தொடர்ந்து நடைபெற்றது; வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களும், சட்டம்—கூட்டுறவு அமைச்சர் செ. மாதவன் அவர்களும் வருகை தந்தனர்; அமைச்சர்களைப் பிரதிநிதிகளும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், ஆணையாளர்களும், மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் சிவ. சண்முகசுந்தரனர், மாவட்டப் பொருளாளர் வ. அ. சங்கரபாண்டியன், வட்டச் செயலாளர் சின்னச்சாமி, அருப்புக்கோட்டை தோழர் பி. பி. என். நல்லதம்பி, அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சௌடி சுந்தரபாரதி, காரியப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஆர். பெருமாள், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். நாயுடு ஆகியோர் வரவேற்றனர்.

எஸ். பி. கே. பெண்கள் உயர்நிலைப் பள்ளி — பாளையம்பட்டி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவியர், அமைச்சர்களை மலர் தூவி வரவேற்றனர்.

அன்றையக் கருத்தரங்குக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தலைமைவகித்தார்; சட்டம்—கூட்டுறவு அமைச்சர் செ. மாதவன் துவக்கிவைத்தார்; அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத் தலைவர் சுப்பா (ரெட்டியார்) வரவேற்பிதழ் வாசித்தளித்தார்; மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ. எஸ். வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். சிறப்பு மலரை வெளியிட்டார்; வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். ஆர். நாயுடு, எம். எஸ். இராமசாமி, கால்நடைத் துறை இயக்குநர் டாக்டர் சுந்தரமூர்த்தி ஆகியோர் உட்பட சட்டமன்ற உறுப்பினர்கள்—ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்—தனிப்பட்ட விவசாயிகள் ஆகியோர் கால்நடைகளைப் பராமரிக்க வேண்டிய அவசியம்பற்றி வலியுறுத்திப் பேசினர்.

கருத்தரங்கில் கூறப்பட்ட கருத்துக்களையும், தீர்மானங்களையும் மகிழ்ச்சியோடு அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டனர்.

எம்.ஜி.ஆர். படிப்பகத் திறப்பு விழா

24-2-68 அன்று வடாற்காடு மாவட்டம் செங்கம் பேருந்து நிலையம் அருகில், செங்கம் வட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். இராதாகிருட்டினன் தலைமையில், திரைப்பட நடிகர் ஆனந்தன் அவர்களால் எம். ஜி. ஆர். மன்றப் படிப்பகம் திறக்கப்பட்டது.

படிப்பகத்திற்குத் தோழர்கள் பலரால் அன்பளிப்புகள் பல வழங்கப்பட்டு முடிவுற்றதும், செங்கம் சிவன்கோவில் எதிரில் இரவு 7-30 மணிக்கு, தோழர் கா. து. பாலு (காரப்பட்டு) தலைமையில் பொதுக் கூட்டம் துவங்கியது.

தலைவர் முன்னுரைக்குப்பின், நடிகர் ஆனந்தன், தோழர்கள் பி. எஸ். சந்தானம் எம்.எல்.ஏ.,

(8-ம் பத்தி பார்க்க)

'என்றும்—எங்கும் ஆளுவோம்' என்ற நினைப்பு வேண்டாம்!

'சரிந்த சாம்ராஜ்ய'மாகிவிட்ட பிரிட்டனைப் பாரீர்— சரித்திரத்தின் தீர்ப்பினைப் புரிந்துகொள்ளுவீர்!

'குழப்பத்திற்கெல்லாம் காரணம் காங்கிரசுக் கட்சியே'- சொந்தக் கட்சியினருக்கு சாப்ரு கண்டனம்-அறிவுரை

"மெலிந்தவர்களை—ஏழை எளியவர்களைக் காப்பாற்றக் கூடியது காங்கிரசுதான் என்ற எண்ணம் எப்போதோ பொய்த்துவிட்டது! இன்று காங்கிரசில் தேங்கியிருப்பது சுயநலக் கூட்டம்தான்! இந்த நாடு நாகரீகம் தோன்ருத கற்காலத்தில் இருப்பதாகக் காங்கிரசு நினைத்துவிடக்கூடாது!

"'ஏகாதிபத்தியம்' மறைந்துவருகிறது என்பதனைப் புரிந்துகொள்ளுவதற்கு, எல்லாம் வல்ல பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கே இரண்டு உலகப் பெரும் போர் தேவைப்பட்டது! ஆனல் காங்கிரசோ, இன்னும் சரித்திரத்தின் பாடத்தினை—தீர்ப்பினைச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை!"

என்ற உருக்கமும் கண்டனமும் கலந்த அறிவுரையைத் தந்து, நாடாளுமன்றத்தில் முன்னுள் நீதிபதி பி.என்.சாப்ரு பேசியபோது, மன்றத்தில் ஆழ்ந்த சிந்தனையும் கவனிப்பும் தென்பட்டன!

நடுநிலைமைக்கும் பதவிக் காலத்தின்போது தொழில் திறமைக்கும் பெயர் பெற்ற காங்கிரசு உறுப்பினரான பி.என். சாப்ரு, தனது உரையில் மேலும் தெரிவித்த கருத்துக்களாவன:—

"அண்மையில் காங்கிரசு அல்லாத மாநில நிர்வாகங்கள் சிலவற்றில் தோன்றிய அமைதியின்மை, குழப்பம் ஆகிய அனைத்துக்கும் காரணம் காங்கிரசே! அந்த மாநிலங்களிலெல்லாம் நடைபெறுவது என்ன என்பதனைக் காங்கிரசு உணர்ந்ததாகவே தெரியவில்லை!

"கடந்த பொதுத் தேர்தல் தந்த முடிவுகளையும் காங்கிரசு மதித்திருப்பதாகத் தெரியவில்லை! மாறியுள்ள மாநில நிர்வாகங்களை மதித்து நடப்பதற்கான மனப் பக்குவத்தையும் புதுடில்லி இன்னும் அதிக அளவு வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது!

"வங்காளம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், பிகார், அரியானு ஆகிய இடங்களில் இன்று எழுந்துள்ள அரசியல் குழப்பங்களுக்கெல்லாம் காரணம் காங்கிரசே!

"'சட்டத்துக்குட்பட்ட வகையில் எந்த ஒன்றையும் சாதித்துக் கொள்ள முடியவில்லை' என்ற நிலை வளர்ந்தால், மக்கள் சட்டத்துக்குப் புறம்பான வகையில் இறங்குவதற்குத்தான் முயற்சிப்பார்கள்."

வங்காளத்தில், கவர்னர், அமைச்சரவையைக் கலைத்தது பற்றி சாப்ரு குறிப்பிட்டதாவது:—

"கூட்டணி அமைச்சரவையைக் கலைப்பதற்கு கவர்னர் எங்கிருந்து அதிகாரத்தைப் பெற்ருர்? இங்கிலாந்தில் மன்னருக்கோ இராணிக்கோ அதிகாரங்கள் இருந்தும் அதைப் பயன்படுத்துவதற்கு அனுமதி கிடையாது!

"'பழக்கம் இல்லை' என்பது போலத்தான், இங்கே உள்ள கவர்னர்களுக்கும் அமைச்சரவையைக் கலைப்பதற்கு உரிமையில்லை!

"அரசியல் சட்டத்துக்கே புறம்பான வகையில் கவர்னர் வங்காள அமைச்சரவையைக் கலைத்திருக்கும் இந்த நடவடிக்கையினுல், சரித்திரம் நம்மை மன்னிக்காது!"

பெங்களூர் தமிழ்ச் சங்க 18-வது ஆண்டு விழா

பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் 18-வது ஆண்டுவிழா, 24—3—68 மாலை 6 மணிக்கு ஒடுக்கத்தூர் மடத்தில் நடைபெறும்; சென்னை பச்சையப்பர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு மா. கி. தசரதன் சொற்பொழிவாற்றுவார். கன்னட எழுத்தாளர் திரு. நிரஞ்சனு தலைமை தாங்குவார்; சங்கம்—இடைநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவ—மாணவிகளுக்கு நடத்திய தமிழ்த் தேர்வில் வரிசை பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்படும்.

கப்பலில் வந்த கோதுமை கடலுக்குள்!

சுமையைக் குறைக்க இந்த 'வேடிக்கை'!

கள்ளிக்கோட்டைத் துறைமுகத்துக்கு அருகில் அராபியக் கடலில், கடந்த வெள்ளியன்று நடந்த சம்பவம் இது!

சுமார் 600 கோதுமை மூட்டைகள் படகுகளிலிருந்து தூக்கிக் கடலில் எறியப்பட்டன!

ஆழ்கடலில் கப்பலிலிருந்து படகுக்கு மாற்றப்பட்ட இந்தக் கோதுமை மூட்டைகள், துறைமுகத்துக்கு அருகில் காற்றுப் பலமாக வீசியது காரணமாக, 'சுமையினுல் படகுகள் கவிழ்ந்து விடுமோ' என அஞ்சப்பட்டுக் கடலில் எறியப்பட்டிருக்கின்றன!

தஞ்சை மாவட்டச் செயலாளர் அறிவிப்பு

"27—3—68 காலை 10-மணிக்கு குடந்தை நகர தி. மு. கழகக் கட்டிடத்தில், தஞ்சை மாவட்ட—வட்டச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர்க் கிளைச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய அவசரக் கூட்டம் நடைபெறும்; அனைவரும் தவருது கலந்துகொள்ள வேண்டுகிறேன்; பொருள்: நகராட்சித் தேர்தல்"

என, தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை ப. நாராயணசாமி அறிவிக்கிருர்.

தமிழ்க்குடிமகன் நிகழ்ச்சிகள்

மார்ச் 24: பரமக்குடி; 29: சோகில்பட்டி; 30: மானுமதுரை.

முகவரி:—அல்லி அச்சகம், பரமக்குடி, முகவை மாவட்டம்.

8—4—68 மேலவைத் தேர்தல்கள்

கழக—கழக ஆதரவு பெற்ற வேட்பாளர் விவரம்

தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்காகப் பல்வேறு தொகுதிகளிலிருந்தும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்களில் கீழ்க்காணும் விவரப்படி தோழர்கள் கழக வேட்பாளர்களாகப் போட்டியிடுகிருர்கள்.

அந்தந்தத் தொகுதிகளைச் சார்ந்த மாவட்டங்களிலுள்ள கழக அமைப்புகளின் நிர்வாகிகளும், தோழர்களும், நாடாளுமன்ற—சட்டமன்ற—நகராட்சி — உள்ளாட்சி மன்றங்களின் கழகத் தோழர்களும் 8—4—68 அன்று நடைபெறும் தேர்தல்களில் கழக வேட்பாளர்கள் பெருவெற்றிபெறும் வகையில் முனைந்து முயன்று பணியாற்றுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிருேம்.

ஆசிரியர்கள் தொகுதி

சென்னை—செங்கற்பட்டு .... க. அறிவழகன் எம்.ஏ.

தஞ்சை .... வி. இராசகோபாலன் பி.ஓ.எல்.

பட்டதாரிகள் தொகுதி

கோவை—நீலகிரி—சேலம்—தருமபுரி.... செ. அரங்கநாயகம் எம்.ஏ.பி.டி., பி.எல்.

உள்ளாட்சித் தொகுதி

மதுரை—இராமநாதபுரம் .... பி. திருஞானம் (தி.மு.க.)

.... சவுந்தரராசன் (சுதந்தரா)

தஞ்சை .... கோ. சி. மணி

சேலம்—தருமபுரி .... ப. தா. முத்து

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குறிப்பு:—ஆங்காங்கு இணைந்து நிற்கின்ற தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களுடைய பெயர் விவரம் பின்னர் வெளியிடப்படும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

24—3—68

சென்னை 4-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு சோலையப்பன் தெருவில்; தலைவர்: பி. கே. மூர்த்தி; பேசுவோர்: இரா. சனுர்த்தனம், ஜீவா-கலைமணி, செல்வி கஸ்தூரி, செல்லம்பாயிரம், ஆண்டியப்பன், முத்துலிங்கம், எல். என். எஸ். புகாரி, என். வி. என். செல்வம், மற்றும் பலர்.

விழுப்புரம்

நாவலர் மன்ற முதலாண்டு விழா; மாலை 6-மணிக்கு பூந்தோட்டம் திடலில்; தலைவர்: எம். சண்முகம் எம்.எல்.ஏ.; பேசுவோர்: காஞ்சி. கல்யாணசுந்தரம், எம். எம். அப்துல் வகாப், புலவர் வேங்கைமார்பன், எஸ். கோவிந்தசாமி, எஸ். ஏ. ஏழுமலை, வி. துரைராசு எம்.சி., இனுயத்துல்லா, வி. சூரியநாராயணு, கே. வி. இராமகிருட்டினன் பி.ஏ.பி.எல்., கே. இராமகிருஷ்ணன், வி. க. தண்டபாணி.

வாணியம்பாடி

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு வாரச்சந்தை நூருல்லா திடலில்; தலைவர்: டி. ஜெகநாதன்; பேசுவோர்: பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணுநிதி, எம். பி. வடிவேலு, டி. வேலாயுதம், வி. என். தத்தப்பன், கே. எஸ். ஆனந்தன், சி. எம். எஸ். பாலு, எஸ். ஆர். இராசசேகரன், பி. லட்சுமணன், சி. கணேசன்.

புதுவை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு செஞ்சிசாலைத் திடலில்; தலைவர்: சி. பி. திருநாவுக்கரசு பி.காம்.பி.எல்.; பேசுவோர்: ஈ. குபேர் எம்.எல்.ஏ., எம். ஏ. சண்முகம், சு. மா. சுப்பராயன், எ. புவியரசு, சி. என். பார்த்தசாரதி, த. தெய்வநாயகம், ந. நந்திவர்மன், ச. அருணன், மற்றும் பலர்.

புதுக்கோட்டை

கருணுநிதி படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு நெய்க்கொட்டான் மரம் கருணுநிதி திடலில்; தலைவர்: என். மீனுட்சிசுந்தரம்; பேசுவோர்: ஆ. திராவிடமணி, அ. தியாகராசன், எம். எஸ். அப்துல் மஜீத், சோம. காசிநாதன், மற்றும் பலர்.

25—3—68

சென்னை 21-வது வட்டம்

கலைவாணர் என். எஸ். கே. நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு தொண்டையார்பேட்டை மணிக்கூண்டு அருகில்; தலைவர்: எஸ் சாந்திவீரன்; பேசுவோர்: மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி., எம். குமார், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., சொ. கி. மூர்த்தி, சு. மோகன்ராசு, து. வேணுகோபால் எம்.சி., கே. எம். தீனதயாளன், கு சுப்பராயலு.

கோவை 7-வது வட்டம்

மக்கள் திலகம் ரசிகர் மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு இருகூர் அங்காளம்மன் கோயில் திடலில்; பேசுவோர்: மு. இராமநாதன், க. மருதாசலம், ஈ. என். ஆர். ஆறுமுகம், ப. சு. கருப்பணன், மற்றும் பலர்.

தஞ்சை 32-வது வட்டம்

கே. வி. கே. சாமி படிப்பக 11-வது ஆண்டு விழா; மாலை 6-மணிக்கு ராஜப்பா நகரில்; தலைவர்: எஸ். இராச இலக்குமி; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., கிரேசி சேவியர், மற்றும் பலர்.

தென்னூர் 5-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ஜெனரல் பசாரில்; தலைவர்: சூசை மாணிக்கம்; பேசுவோர்: ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., நடராசன், செவந்திலிங்கம், எஸ். ஏ. ஜி. ராபி, நாகூர்கனி, மற்றும் பலர். (இரவு 3-மணிக்கு முருகுபாண்டியன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

திருமணம்

நாகை நகர தி.மு.க. செயற்குழு உறுப்பினரும் நகரமன்ற உறுப்பினருமான செல்வன்: **என். பக்கிரிசாமிக்கும் — செல்வி: பேபிக்கும்** 25—3—68 காலை 10 மணியளவில் நாகை ஸ்டார் திரைப்பட அரங்கில் தஞ்சை மாவட்ட தி.மு. கழகச் செயலாளர் மன்னை ப. நாராயணசாமி தலைமையில் திருமணம் நடைபெறும்; திருவாளர்கள் ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., ச. தியாகராசன் பி.ஏ., பி.எல். ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

பாலர் அரங்கம்

மார்ச் 24-ந் தேதி பிற்பகல் 2-மணி; மாலை 4-15 மணிக்கு

'ஸ்கபங்கா'

(கலர் படம்)

(கட்டணம் வழக்கம்போல்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.